௧.

தர்க்கசங்கிரகம்.

என்கின்ற

வடமொழிக்கிரந்தம்

காஞ்சீபுரம்

இராமகிருஷ்ண

சாஸ்திரியாரால்

தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டு,

இந்துவித்தியாசபைக்குதவியாகிய

பிரசுரமாக்கும

பாலபோதகவித்தியாசாலைச்

சபையாரால்,

வித்தியாவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சாலி: ௲௭௱௭௰-

இங்கி- ௲௮௱௫௰௧.

இதன்விலை -அணா-



உ

தர்க்கசங்கிரகம்,



கடவுள்வணக்கம்.

விசுவேசனை மனதில்வைத்து, குருவந்தனஞ்செய்து, இளைஞர்களெளிதில்விளங்கும்பொருட்டு, தர்க்கசங்கிரகஞ்செய்யப்படுகின்றது.

திருவியம், குணம், கர்மம், சாமாந்நியம், விசேடம், சமவாயம், அபாவம், ஆகிய ஏழு பதார்த்தங்கள்.

அவற்றுள் திருவியங்கள், பிருதிவி-அப்பு-தேஜஸ் வாயு - ஆகாசம் காலம்-திக்கு-ஆத்மா-மனம்-ஆகியவொன்பதுமேயாம்.

உருபம்-இரசம் கந்தம்-பருசம் - எண் - பரிமாணம் - வேறாகவிருக்கை - ஸம்யோக

ம்-விபாகம் பரத்துவம் - அபரத்துவம்-கு
ருத்துவம்-திருவத்துவம்- சிநேகம்- சப்த
ம்-புத்தி-சுகம்-துக்கம்-இச்சை-பகை- பிர
யதனம்-தர்மம்- அதர்மம் - ஸம்ஸ்காரம்-
ஆகிய-௨௪-ம், குணங்கள்.

எடுத்தல் - படுத்தல் - குறுக்கல் - நீத்
தல் - செலவு ஆகும் பேதத்தால் ஐந்து
கர்மங்கள்.

பரம் - அபரம் - எனச்சாமாந்நியமிருவ
கைத்து.

நித்தியதிருவியங்களிலிருக்கின்றவைகள்
விசேடங்கள்-அவைகள்-அநந்தங்கள்

சமவாயமென்பதொன்றே

அபாவம்-நான்குவகைத்து - பிராகபாவ
ம்-பிரத்துவம்ஸாபாவம்- அத்தியந்தாபாவ
ம்-அந்நியோந்நியாபாவம்-என.



அதை அருந்துகிறவருடைய தாபிருதிவி [illegible] அம்சம் [illegible] திருவகைத் [illegible] - திருப்தியுமெனவும் [illegible] [illegible] மனவு [illegible] - திருத்தியம் [illegible] பரமா [illegible] - அதிர் [illegible] ரியகாரியரூபம் - [illegible] [illegible] - [illegible] இந்திரியம் - விஷயமன [illegible] [illegible] ல [illegible] [illegible] ணிகளின [illegible] - [illegible] [illegible] [illegible] கைகளை [illegible] [illegible] - அம்சத்துளமைகளை [illegible] [illegible] - [illegible] மனையும் [illegible] [illegible] [illegible].

[illegible] அம்சதிரு [illegible] [illegible] - [illegible] [illegible] - வி [illegible] [illegible] - [illegible] மவருண் [illegible] [illegible] - [illegible] ரியசுவையறியத் [illegible] - [illegible] இரியம் - அம்சத்துநாருணி [illegible] - [illegible] - [illegible] - [illegible] [illegible].

வெப்பமுணர் [illegible] - அம்சதிரு

வகைத்து நித்தியமநித்தியமென - நித்தியம்
பரமாணுரூபம் - அநித்தியம் காரியரூபம் - பி
ன்னும்மூவகைத்து சரீரேந்திரியவிடயபே
தத்தால் - சரீரம் சூரியலோகத்திற் பிரசித்த
ம் - இந்திரியம் உருபத்தைக் கிரகிக்கத்தக்க
து - நேத்திரேந்திரியம் - அஃது கரிவிழிமு
னையிலிருக்கின்றது - விடயம் நால்வகைத்து -
பௌமம் திவ்வியம் ஔதரியம் - ஆகரசம்
என்னும்பேதத்தால் - பௌமம் நெருப்புமுத
லிய - திவ்வியம்மின்னன்முதலிய - அஃதுநீ
ரைப்பற்றியது. புசிக்கப்பட்டவன்னத்தைச்சமா
ர்த்துதற்குக்காரணமாயிருக்கின்றது ஔதரிய
ம் - ஆகரசம்பொன்முதலிய

உருபமின்றிய பரிசமுடையது வாயு - வெ
ப்பமுங்குளிர்ச்சியுமின்றிப் பரிசமுடைய
தெனவுமுரைப்பர் அஃதிருவகைத்து நித்
தியமநித்தியமென - நித்தியம் பரமாணுரூ
பம் அநித்தியம் காரியரூபம் - பின்னுமூவ
கைத்து சரீரேந்திரிய விடய பேதத்தால் -
சரீரம் வாயுலோகத்திற் பிரசித்தம் - இந்திரி
யம் பரிசத்தைக் கிரகிக்கத்தக்கது - அஃது துவ

த்வக்கெனப்பெயர்பெறும் - சரீரமுழுதிலும் வியாபித்திருக்கும். விஷயம் - மரமுதலியவற்றையசைகைக்குக் காரணமாகவிருக்குமது - சரீரத்தினுள்ளே சஞ்சரிக்கும் வாயு பிராணனாம் அஃதொன்றாயினும் உபாதிபேதத்தாற் பிராணாபானமுதலியவைந்து பெயர்களைப் பெறுகின்றது.


சப்தத்தைக் குணமாகவுடையது ஆகாசம் - அஃதொன்றாயும் விபுவாயும் நித்தியமாயுமிருக்கின்றது.

“சென்றது” என்பது முதலிய வியவகாரத்திற்குக் காரணமாயிருப்பது காலம் - சகலத்திற்கும் ஆதாரமாயிருப்பது காலமெனவுங்கூறுவர் - அஃதொன்றாகியும் விபுவாகியும் நித்தியமாகியுமிருக்கின்றது.

கிழக்குமுதலிய வியவகாரத்திற்குக் காரணமாயிருப்பது திக்கு - அஃதுமொன்றாகியும் விபுவாகியும் நித்தியமாகியுமிருக்கின்றது.

ஞானத்திற்கிருப்பிடம் ஆத்மா - அவ்விரு வகைப்படும் பரமாத்மா - ஜீவாத்மாவென. அவற்றுள், ஈசுவரன் [illegible] சர்வஞ்ஞனாய் ஒருவனாயிருக்கின்ற பரமாத்மாவொன்றே - ஜீவாத்மா அந்தந்தசரீரந்தோறும் வெவ்வேறாக விருக்கின்றது - விபுவாயும் நித்தியமாயுமிருக்கின்றது.

[illegible] சுகாதி [illegible] - [illegible] விருக்கின்றது.



[illegible] உடை [illegible] - [illegible] - [illegible] பொருள் [illegible] - [illegible] வையுடையது.

இரஸநேந்திரியத்தாலுணரத்தக்க குணம்
இரஸம்- அஃது தித்திப்பு- புளிப்பு - உப்பு-
உறைப்பு- கைப்பு- துவர்ப்பு - என்னும் பேத
த்தால் ஆறுவகை [illegible] சல
த்தில் [illegible] [illegible] வகையுமு
ண் டு- ஜலத்தி [illegible] ருக்கும்.

கிராணே [illegible] கணம்
க [illegible] ம - [illegible]
க [illegible] ருக்கும்.

பரிசம்- துவகிந்திரிய [illegible] மா
த்திர [illegible] க்குண ம- அஃது [illegible]
து [illegible] சம்-வெப்பம் - [illegible]
ட களிலை [illegible] பேதத்தால், [illegible]
குளிர்ச்சி ஜலத்தி [illegible] - வெப்பம் தேஜ
[illegible] - [illegible] வெப்பங்களின்மை
பிருதிவியிலும் வாயுவிலுமிருக்கும்.

உருபமுதலிய நான்கும் பிருதுவியிற் ச
மைத்தலாலுண்டாகும்- அவைகள் அநித்தி
யங்கள்- மற்றவைகளிலியல்பாகவேயுண்டா
யிருக்குமாதலால நித்தியப்பொருளிலுள்ள

நித்தியம், அநித்தியப்பொருளிலுளது அநி
த்தியம்.

ஒன்றுமுதலியவழக்கிற்குக்காரணமாகவி
ருப்பதுஎண். அஃது எல்லாப்பொருள்களி
லுமிருக்கும்-ஒன்றுமுதலபரார்த்தம்வரை
க்குமுளது. ஒருமை நித்தியமாகியுமநித்திய
மாகியு மிருக்கும் - நித்தியப்பொருளிலுள
துநித்தியம் - அநித்தியப் பொருளிலுளது
அநித்தியம் - இரண்டுமுதலியவோவெண்ணு
ல எங்கும அநித்தியந்தாமே.

அளவெனும்வழக்கிற்குரியநடபாக்கா
காரணம்பரிமாணம அஃதெல்லாப்பொரு
ளிலுமிருக்கும-அணுவெனவும - மகத்தெ
னவும்-நீட்சியெனவும-குறுமையெனயும்-
நாலவகைத்து.

“வேறு” எனும்வழக்கிற் கின்றியமையா
க்காரணம் வேறாகவிருக்கை - எல்லாப்பொ
ருளிலுமுண்டு.

“கூடித்து” என்கிறவழக்கிற்குக் காரண

[illegible] ருக்குங் குணம் ஸம்யோகம் - அஃதெல் லாப்பொருளிலுமுளது.

ஸம்யோகத்தை [illegible] குணம் விபாக ம் - அஃதெல்லாப் பொருளிலுமுண்டு.

[illegible] பரம் - இஃது [illegible] வழங்குகிற் [illegible] காரணங்களாயிருப்பவை [illegible] வைகளுக் [illegible] கிருக [illegible] னையும் [illegible] பதில் [illegible] கிருத [illegible] பதில் இருக்கிறதா பரத்துவம் - முன்பிறந்த [illegible] கால [illegible] பரத்துவம் - பின்பிறந்த [illegible] டத்திலு காலகிருதாபரத்துவம்.

முன்விருக்க [illegible] அச [illegible] வாயிகாரணமாயிரு [illegible] அஃதுப்பிருதிவி ஜலங்க ளிலிருக்கும்.

முன்பெருகுதற்கு அசமவாயிகாரணமா

யிருப்பது திரவத்துவம்- இஃது பிருதிவியிலும் ஜலத்திலும் தேஜஸிலுமிருக்கின்றது - இயர்கையானதெனவும் சேர்க்கையானதெனவும் இருவகைத்து - இயர்கைத்திரவத்துவம் ஜலத்திலிருக்கின்றது - சேர்க்கைத்திரவத்துவம் பிருதிவியிலும் தேஜஸிலுமிருக்கின்றது - பிருதிவியில் - நெய் முதலியவற்றில் நெருப்பின் சேர்க்கையால் திரவத்துவமுண்டாகின்றது - தேஜஸில் - பொன்முதலியவற்றிலும் அப்படியேகொள்க.

தூள்முதலியவைகள் பிண்டமாவதற்குக் காரணமாயிருக்குங்குணம் ஸ்நேகம் - அஃது ஜலத்திலமாத்திரமிருக்கின்றது.

செவியாலுணரத்தக்க குணம் சப்தம் - அஃது ஆகாசத்திலமாத்திரமிருக்கும் - துவனியாத்மகம் வர்ணாத்மகமென இருவகைத்து - துவனியாத்மகசப்தம் - பேரிமுதலியவற்றிலுண்டாவது - வர்ணாத்மகம் - ஸம்ஸ்கிருத முதலியபாஷைகளின் சப்தம்.

சகலவியவகாரத்துக்குங் காரணமாயிருப் பது புத்தி - அஃது ஞானமெனப்படும் - அப்பு த்தி ஸ்மிருதி யனுபவமெனவும் இருவகையா ம் - முன்னுணர்ச்சியாற் ஞாபகத்தாலுண்டாகும் ஞானம் ஸ்மிருதியெனப்படும் - அப்படியுண்டா காத ஞானம் அனுபவமெனப்படும். அது இருவகைத்து - யதார்த்தம் - அயதார்த்தமென. அதத்தன்மைப் பொருளில் அத்தன்மையநு பவம் யதார்த்தம் - அதத்தன்மையிலாப் பொ ருளில் அத்தன்மையநுபவம் அயதார்த்தம்.

யதார்த்தாநுபவம் - பிரத்தியக்ஷம் - அநு மிதி - உபமிதி - சப்தம் - என்னும்பேதத்தால் நாலுவகையாம். அதற்குக்காரணமும் பிரத்தி யக்ஷம் அநுமானம் உபமானம் சப்தமென நாலுவகையாம். இன்றியமையாக்காரணமே காரணமாம் காரியத்துக்கு நியதமாய் முன் னிருப்பது காரணம் - காரியமாவது பிராகபா வத்துக்குப்பிரதியோகி - அல்லதுஎதிரிடை.

காரணம் - சமவாயி - அசமவாயி - நிமித்த மெனும் பேதத்தால்மூவகைத்து.

எதனோடு கூடியதாகக் காரியமுண்டாகின்றதோ அது சமவாயிகாரணம்.

உதாரணம் - படத்திற்கு நூல்கள் போலவும் படத்தின் உரூபமுதலியவற்றிற்குப் படம் போலவும்.

காரியத்தின் தன்மையிலேயாவது காரணத்தின் தன்மையிலேயாவது ஒருபொருளில் கூடியிருக்கின்ற காரணம் அசமவாயிகாரணம்.

உதாரணம் - படத்திற்கு நூல்களின் சேர்க்கை போலவும் - படத்தின் உரூபத்திற்கு நூல்களின் உரூபம் போலவும்.

அவ்விரண்டுமல்லாத காரணம் நிமித்த காரணம்.

உதாரணம் - படத்திற்குத் தறி துரி * முதலியவைகள் போல.

இம்மூன்று காரணங்கட்குள் இன்றியமையாத காரணமெதுவோ அதுவே கரணமெனப்படும் ஆதலால் பிரத்தியக்ஷ ஞானத்திற்குக் கரணம் பிரத்தியக்ஷமே.

* துரி. நெய்யறகருவி.

இந்திரியத்திற்கும் பொருளுக்கும் உண்டாகும் சம்பந்தம் இந்திரியார்த்த ஸந்நிகர்ஷம். அதனாலுண்டாகும் அறிவுபிரத்தியக்ஷமெனப்படும். அஃது இருவகைத்து நிர்விகல்பகம் ஸவிகல்பகமென.

பிரகாரமின்றித்தோற்றுமறிவு நிர்விகல்பகம்.

உதாரணம்- இஃதொருபொருள். *

பிரகாரத்தோடு தோற்றுமறிவு ஸவிகல்பகம்.

உதாரணம் இவன் டித்தன்-இவன்பிராமணன் - இவன்கரியவன்.

பிரத்தியக்ஷஞானத்திற்குக்காரணமாயிருக்கும் இந்திரியார்த்தஸந்நிகர்ஷம் அறுவகைத்து-ஸம்யோகம்-ஸம்யுக்த ஸமவாயம்-ஸம்யுக்த ஸமவேத ஸமவாயம் - ஸமவாயம்-ஸமவேத ஸமவாயம்-விசேஷண விசேஷ்ய பாவமென.

கண்களுக்குக்குடம் பிரத்தியக்ஷமாகும்போது- ஸம்யோகமெனும் ஸந்நிகர்ஷம்.

குடத்தினுருவப்பிரத்தியக்ஷமாகும்போ

* தலைமையிலாங்காணுணைத்தல்.

துஸம்யுக்தஸமவாயமெனும் ஸந்நிகர்ஷம்-
ஏனெனில் நேத்திரேந்திரியத்தோடு கூடிய
குடத்தில் உரூபம் ஸமவாயமாதலால்.

உரூபத்திலே தன்மையுமுண்டு பிரத்திய
க்ஷமாகும்போது ஸம்யுக்தஸமவேதஸமவா
யம்- நேத்திரேந்திரியத்தோடு கூடியகுடத்
திலே- ஸமவேதரூபத்தின் தன்மை ஸமவாயமாத
லால்.

செவிக்குச் சப்தம்பிரத்தியக்ஷமாகும்போ
து ஸமவாயஸந்நிகர்ஷம்- செவியிலே இருந்
திருக்கும் ஆகாசமே இந்திரியமாதலா
லும்- சப்தம் ஆகாசத்தின் குணமாதலாலும்-
குணத்திற்கும் குணிக்கும் ஸமவாயமாதலா
லும்.

சப்தத்தின் தன்மை பிரத்தியக்ஷமாகும்
போது ஸமவேதஸமவாயம்- செவியிலே ஸம
வேதமாயிருக்கும் சப்தத்திலே சப்தத்தின் த
ன்மை ஸமவாயமாதலால்.

அபாவம்பிரத்தியக்ஷமாகும்போது விசே
ஷண விசேஷ்யபாவமெனும் ஸந்நிகர்ஷம்.
இவ்விடத்தில் குடத்தின் அபாவமிருக்கி
ன்றது எனும்போது நேத்திரேந்திரியத்

தோடொக்க அவ்விடத்தில் குடத்தின் அபா வம் விசேஷ்யமாகத் தோன்றுகையாலும் - அவ்விடம் குடத்தின் அபாவத்தையுடையது என்ற போது தோன்றுகிறபடியால் அதைத்தோடொக்க அவ்விடத்தில் குடத்தின் அபாவம் விசேஷணமாகத் தோன்றுகையாலும்

ஸந்நிகர்ஷம் [illegible] ஆறு [illegible] த்தியக்ஷ [illegible] காரண-

அதற்கு [illegible] ப்ர [illegible] [illegible] யக்ஷமான [illegible] [illegible] [illegible].



அநுமிதிக்குக் கரணமாகயிருப்பது அநுமானம் - பராமர்சத்தினாலுண்டாகும் அறிவு அநுமிதி - பக்ஷத்திலாவது வியாப்தியோடுகூடிய பக்ஷதர்மதையை அறிதல் - இம்பிதப் [illegible] இல்லை, அட மலை நெருப்பை வியாப்பியமாகவுடைய புகையையுடையது இம்மலை - இதுவே பராமர்சம் - அலை நெருப்புடையதென்றறியும் அறிவு எனப்படும் - அவ்வறிவிலுண்டாகும் மலை நெருப்புடையதென்னுமறிவு அநுமிதி - எங்

கே புகையிருக்குமோ அங்கே நெருப்பிருக்குமென்பது வியாப்தியெனப்படும் - வியாப்தியையுடைய மலைமுதலியவற்றிலிருப்பது. அஃது பக்ஷதாமத்தின் தன்மையெனப்படும்.

அநுமானம் இருவகைத்து - சுவார்த்தம் - பரார்த்தமென - தனக்கு அநுமிதிக்குக்காரணமாகவிருப்பது சுவார்த்தம் - அஃதெவ்வாறெனில் - ஒருவன் அடுப்புமுதலிய விடங்களில் அடிக்கடிப்பார்த்த சதருமை - தானே வியாப்தியெனுமறிவுள்ளவனாகி மலையருகே சென்று அவ்விடத்தில் நெருப்பிருப்பதாக சந்தேகமுற்று, ... பின்பு - ... வியாப்பியமாகவுள்ள புகையைப்பார்த்து ... வியாப்தியை நினைவு அவனுக்குண்டாகின்றது - இஃதே லிங்கபராமர்சமெனவுங் கூறப்படும். அதினின்றும் மலை நெருப்புற்றதென்னுமறிவாகிய அநுமிதியுண்டாகின்றது - ஸ்வார்த்தாநுமானமிவ்வாறறியப்படுக.

ஒருவன் தானே புகையால் நெருப்பை

னுமித்து மற்றொருவனுக்குத் தெரியும் பொருட்டு பஞ்சாவயவ வாக்கியங்களையுரைப்பான் - அந்த பரார்த்தாநுமானமெனப் படும்.

அந்த வாக்கியமாவது - மலைநெருப்புடையது - புகையுடைமையால - புகையுடையதெதுவோ அது நெருப்புடையது அடுப்பைப்போல - இதுவுமப்படியே - ஆதலாலப்படி - என்று ஐந்து வாக்கியமாலே மற்றவனும் நெருப்பை யறிவானாகும்.

பிரதிக்ஞை - ஹேது - உதாரணம் - உபநயம் - நிகமனம் - எனப்படுவன பஞ்சாவயவங்கள்

மலைநெருப்புடையது - என்பது பிரதிக்ஞை - புகையுடைமையால என்பது ஹேது - புகையுடையதெதுவோ அது நெருப்புடையது அடுப்பைப்போல் என்பது உதாரணம் - இதுவுமப்படியே என்பது உபநயம் - ஆதலாலப்படி என்பது நிகமனம்

ஸ்வார்த்தாநுமிதி - பரார்த்தாநுமிதி - இவை களுக்கு - லிங்கபராமர்சமே காரணமாதலால்லி

ங்கபராமர்சம் அநுமானமெனப்படும்.

இலிங்கமமூவகைத்து அந்வயவியதிரேகி- கேவலாந்வயி- கேவலவியதிரேகி -என.

அந்வயத்தினாலும் வியதிரேகத்தினாலும் வியாப்தியையுடையது - அந்வயவியதிரேகி - எப படியெனில் - சாதிக்கப்படுமக்கினியில புகை யுடைமைபோல.

ஆதலால் எவ்விடத்திற்புகையுண்டோ அவ் விடத்திலநெருப்புண்டு - அட்டிற்போல என் பது-அந்வயவியாப்தி.

எங்கேநெருப்பிராதோ அங்கே புகையி ராது பெருமடுபோலென்பது வியதிரேகவி யாப்தி.

அந்வயத்தைமாத்திரம் வியாப்தியாகவு டையதுகேவலாந்வயி - எப்படியெனில் குடம்பெயருககு விஷயமானது - தோற்ற த்திற்குவிஷயமாதலால்- படம்போல - இவ் விடத்தில் தோற்றத்திற்கும் பெயருக்கும் விஷயங்களாக விருக்கின்றவைகட்கு வியதி ரேகவியாப்த்தியிலலை- ஏனெனில் எல்லாப் பொருள்களும் தோற்றத்திற்கும் பெயரு

கரூப விஷயமாகுமாதலால்.

வியதிரேகத்தைமாத்ர வியாப்தியா கவுடையது கேவலவியதிரேகி-எப்படி எனில் பிருதிவி மற்றவைகளினின்றும் வேறு கந்தமுடைமையால்-மற்றவைகளைக்காட்டி லும் வேறாகாதிருப்பது எதுவோ அது கந் தமுடையதல்ல- ஜலத்தைப் போல் இஃதப்ப டியல்ல ஆதலால் அப்படியல்லவென்னுமிட த்து - கந்தமுடையது மற்றவைகளைக்காட் டிலும் வேற்றென்கிற அந்வயதிருஷ்டாந்தமி ல்லை- ஏனெனில் பிருதிவிமாத்திரம் பக்ஷமா தலால்.

பக்ஷமென்பது சந்தேகமானசாத்தியத் தையுடையது- எப்படியெனில் புகையுடை மையைக்காரணமாகவுள்ளமலையானது போல.

நிச்சயிக்கப்பட்டிருக்கும் சாத்தியத்தை யுடையது ஸபக்ஷமெனப்படும் - அட்டிற் போல என்பது

நிச்சயிக்கப் பட்டிருக்கும் சாத்தியத்தி னின்மையுடையது - விபக்ஷம் - பெருமடு போல என்பது

ஸவ்வியபிசாரமென்றும் விருத்தமென்றும் ஸத்பிரதிபக்ஷமென்றும் அசித்தமென்றும் - பாதிதமென்றும் ஹேத்வாபாஸங்களைந்து.

ஸவ்வியபிசாரமென்பது அநேகாந்திகம் பலவிடத்திருக்குமென்பது.

அஃது மூவகைத்து-ஸாதாரணம்- அஸாதாரணம் அநுபஸம்ஹாரியெனும் பேதத்தால்.

சாத்தியத்தின் இன்மையுடையதிலிருப்பது சாதாரணம்-எப்படியெனில்-மலை நெருப்புடையது- கோத்திரத்தன்மையுடைமையால் என்புழி-கோத்திரத்தன்மை நெருப்பில்லாத பெருமடுவிற் கூடவிருப்பதால்.

சகலஸபக்ஷவிபக்ஷங்களிலும் வியாபித்திராமை அசாதாரணம்- எப்படியெனில்-சப்தம் நித்தியம் சப்தத்தன்மையாலென்புழி சப்தத்தன்மைஎல்லா நித்தியாநித்தியப்பொருள்களினின்றும்விலங்கி சப்தத்தில்மாத்திரிருக்கின்றது.

அந்வய வியதிரேக திருஷ்டாந்தமற்றது அநுபஸம்ஹாரி - எப்படியெனில் - எல்லாம் அநித்தியமதோற்றப்படுந் தன்மையாலென் பதி எல்லாம் பக்ஷமாகலின் திருஷ்டாந்தமில்லை.

ஸாத்தியா பாவத்திலே வியாபித்திருக்கும் ஹேது - விருத்தஹேது - எட்படியெனில் சப்தம் நித்தியம் - செயப்படு தன்மையால் என்பதி - செயப்படுதன்மை நித்தியத்தன்மையலாத அநித்தியத்தன்மையோடுகூடியது - எப்படியெனில் - எது செயப்படுதன்மையுடையதோ அது அநித்தியமெனப்படுகின்றது.

சாத்தியாபாவ சாதகமாகிய வேறுகாரணமுள்ளது ஸதபிரதிபக்ஷம் - எப்படியெனில் சப்தம் நித்தியம் - கேட்கப் படுந்தன்மையால - சப்தத்தன்மைபோலவென்பது ஹேதுவல்ல - ஏனெனில் சப்தம் அநித்தியம செயப்படு தன்மையால் குடம்போல எனப்படுவதால்.

அஸித்தம் மூவகைத்து ஆச்ரயாஸித்த மெனவும் ஸ்வரூபாஸித்தமெனவும் வியாப்யத்வாஸித்தமெனவும்.

ஆசிரயாஸித்தங் காட்டப்படுமெனில் - வானத்திற் பூத்ததாமரை கந்த முடைத்து - தாமரைத் தன்மையால - குளத்திற் பூத்ததாமரைபோல வெப்புழி - வானத்திற் றாமரை யில்லாமையால் - ஆசிரயம் அஸித்தமாதலின் ஆசிரயாஸித்த மாயிற்று.

ஸ்வரூபாஸித்தங் காட்டப்படுமெனில் - சப்தமானது குணம் - கண்ணிற்கு விஷயமாதலால் எப்புழி கண்ணிற்கு விஷயமாதலை சப்தத்திலில்லை - ஏனெனில் அது செவிக்கு விஷயமாக வுண்டாதலால - இது ஸ்வரூபாஸித்தமாயிற்று.

உபாதியோடு கூடியது வியாப்யத்வாஸித்தம் உபாதியென்பது சாத்தியவ்வியாபகமாயும் சாதனம் அவ்வியா பகமாயுமிருப்பது.

சாத்திய வியாபக மெனபது, சாத்தியத்

சோடு கூடியிருப்பதின் அத்தியந்தாபாவத் திற் [illegible] சம்போகித்துவம.

சா[illegible]யாபக[illegible]மாயிருப்பது-சாதனத்தோ ரிக [illegible]டிருப்பதின் அத்தியந்தாபாவப்பிரதி யோகித்துவ [illegible] மயமாதபடியால்- மற்புகை யை [illegible] புகையை[illegible] என்பது- க ரூபமாவிறகின் சேர்க்கை உபாதி- புகையி ருக்குமிடத்தில் ஈரவிறகின் சேர்க்கையிருக்கு மென சாத்தியவியாபகத் தன்மையாயிற்று- எங்கே நெருப்புண்டோ அங்கேயெல்லாம் ஈரத்திற் சேர்க்கையில்லை- இருப்புக்குண்டில் ஈரவிறகின் சேர்க்கையில்லையால் - இவ்விக மாகசாத்தியவ்வியாபகமாய்ச்சாதனம அவ்வி யாபகமாதலின் ஈரவிறகின் சேர்க்கை- உபா தி-உபாதியுடன் கூடிய [illegible] நெருப்புடை மை-வியாப்பியத்துவாசித்தம்.

எவ்விடத்தில் சாத்தியாபாவம் பிரமாண ந்தரத்தினாலே நிச்சயிக்கப் படுகின்றதோ அதுபாதித மெனப்படும் - எப்படியெனி ல்- நெருப்பு வெப்பமற்றது- பொருளின் தன்மையால் என்புழி வெப்பமின்மைசா

த்தியம் - அதன் அபாவம் - வெப்பதன்மை - பாகசப்பிரத்தியக்ஷத்தினால் கிரகிக்கப்படுகின்றமையால் பாதிதமாயிற்று.

அநுமானம்ஸமாப்தம்.



உபமிதிக்குக் காரணமாயிருப்பது உபமானம் - இருபதப்பிரதிப்பொருளுக்குஞ் சம்பந்தஞானமாகிய அறிவு உபமிதி - அதற்குக் காரணமாயிருப்பது சாதிருசியவுணர்ச்சி - எப்படியெனில் - ஒருநாகரிகபுருஷன் கவயமென்னும் பதப்பொருளறியாமல் வனசஞ்சாரியால் கவயம் மாட்டைப்போன்றதெனக் கேள்வியுற்று - காட்டிற்சென்று அந்தவாக்கியத்தை நினைந்து மாட்டின்சாதிருசியத்தோடு கூடியபொருளைக் காண்கின்றான் - பின்பு - இதுதான் கவயபதப்பொருளென்கிற உபமிதி உண்டாகின்றது.

ஆப்தவாக்கியம் சப்தமெனப்படும். ஆப்தன் யதார்த்தஞ்சொல்லுகிறவன் - வாக்கியம் என்பது சொற்களின்திரள - சொல்கொ

ஷ்டிவெள்ளைப்பசுவையோட்டிவா என்பது போல.

சக்தியுள்ளது பதம் - அல்லது சொல்லெனப்படும் - சக்தியென்பது இவ்வொலியால் அப்பொருளைவிளக்கத் தக்கதென்று கடவுளாலிடப்பட்ட குறியாம்.

விழை - உரிமை - ஒவ்வல் - இம்மூன்றும் வாக்கியத்தின் பொருள் விளங்குதற்குக் காரணமாம்.

விழைவென்பது மற்றொருபதத்தினால் விழைவப்படும் பொருள் விளக்குந் தன்மை.

பொருளிற்குப் பாதகமில்லாமை - உரிமை எனப்படும்.

ஒவ்வலென்பது விளம்பமின்றிச் சொற்களையுச்சரித்தல்.

விழைவிற் கொவ்வாத வாக்கியம் பிரமாணமல்ல - பசுகுதிரைபுருஷன் யானையென்பது போல - இதில் விழைவில்லை.

நெருப்பால் நனை என்கிறவாக்கியமும் பிரமாணமல்ல - உரிமையின்மையால்.

ஓரியாமத்திற்கோர்தரமெவ்வொருசொல்
லாகப் பசுவைக்கொண்டுவாவென வெவ்வே
றாகவுரைக்கப்படும்பதங்களையுடைய வாக்கி
யமும்பிரமாணமல்ல - ஒவ்வுதலின்மையால்

வாக்கியமிருவகைத்து-வைதிகம் லௌகிக
மென - வைதிகமென்பது ஈசுவரனாற்சொ
ல்லப்பட்டதாதலின் முழுதும் பிரமாணம்-
லௌகிகமென்பதில் ஆப்தவாக்கியம் மாத்
திரம்பிரமாணம் - மற்றது பிரமாணமல்ல.

வாக்கியப்பொருளின் விளக்கமென்பது-
சாப்தபோதம் - அதற்குக்காரணம் சப்தம்-
ஏனயதார்த்தாநுபவமுரைக்கப்பட்டது.

அயதார்த்தாநுபவமூவகைத்து - சம்ச
யம் விபரியயம்தர்க்கமெனும் பேதத்தால்.
ஒருதன்மையில் விரோதமான பலதன்மை
புளவாகக்கொள்ளுமறிவு சம்சயம் எனப்ப
டும்-எப்படியெனில் -மனிதனோ கம்பமோ
என்பதுபோல.
பொய்யறிவு - விபரியய மெனப்படும்

முத்துச் சிப்பியி னிடத்தில் வெள்ளியெனு ந்தோற்றம்போல.

வியாப்பியத்தை யேற்றியதனால் வியாபகத்தைப் புகட்டல் தர்க்கம் - எப்படியெனில மலையில நெருப்பில்லாவிடின்புகையு மில்லையென்பதுபோல.

ஸ்மிருதியு மிருவகைத்து - யதார்த்தம் அயதார்த்தமென - நினைக்கத்தக்க தன்மையாலுண்டாவது யதார்த்தம் நினைக்கத்தக்க தன்மை யில்லையாலுண்டாவது - அயதார்த்தம்.

சுகமென்பது - எல்லவர்க்கும் அனுகூலமாகற்றோற்றும் உணர்ச்சி

துக்கமென்பது - எல்லவர்க்கும்பிரதிகூலமாகற் றோற்று முணர்ச்சி.

இச்சையென்பது மனவிருப்பம் - ஆசை

பகையென்பது மனதின்கோபம்.

பிரயத்தினமென்பது-முயலுஞ்செய்கை.

தர்மமென்பது - விதிக்கப்படுங் கருமத்தினாலுண்டாகும பயன்.

அதர்மமென்பது - விலக்கப்படுங்கருமத்தினாலுண்டாகுமது.

புத்தி முதலியவெண்குணங்களும் ஆத்துமா மாத்ரத்தி லிருக்குமவைகள் - நித்தியாநித்தியமெனும பேதத்தாலிருவகையின.

ஈசுவரனுடையவை நித்தியம - சீவனுடையவை யனித்தியம்.


ஸம்ஸகாரம் மூவகைத்து - வேகம் - பாவனை - உண்மையை ஸதாபித்தல எண.

வேகம் பிரதிவிமுதலிய நான்கிலும் மனதிலுமிருக்கும்.

அநுபவத்தினாலுண்டாகி - நினைப்புக்கு ஹேதுவாயிருப்பது பாவனை - அஃது ஆத்

துமாவில்மாத்திர மிருக்கும்

வேறுவிதமாகியிருப்பதை மறுபடிமுன்னிருந்த தன்மை யுளதாகச்செய்வது உண்டையைஸதாபித்தலெனப்படும். இத்தன்மை பாய்முதலியபிரதிவியில்மாத்திர மிருக்கும்.



அசைவின்வடிவுகொண்டதுகருமம்- உயர்விடத்தைச் சேருதற்கு ஹேதுவாயிருப்பது எறித்தல் - தாழ் விடத்தைச சேருதற்குஹேதுவாயிருப்பது படுத்தல - சரீரத்தைக் குவிந்திருப்பதற்கு ஹேதுவா யிருப்பது சுருக்கல - பெரிதாகவிடத்தைச் சேருவதற்குஹேதுவா யிருப்பது விரித்தல் - மற்றவையெல்லாம் செல்லலெனப்படும் - இவைப்பிருதுவிமுதலியநான்கிலுமிருக்கும்.

நித்தியமாயும் ஒன்றாயும் பலவையநுசரித்ததாயு மிருப்பது சாமாந்நியம் - திரவியகுண கருமங்களிலிருக்கும்- அது பரமெனவும் அபரமெனவும் இருவகையாயிருக்கும் - பரமென்பது சத்தை -அபர மென்பது திரவியத்தன்மைமுதலிய

நித்திய திருவியங்களி லிருக்கும் விசேஷங்களனந்தங்கள்.

நித்திய சம்மந்தம் சமவாயமெனப்படும்-அஃது ஒருகாலசேராமலும்சித்தமாயமிருப்பது. அயுதஸித்தசம்பந்தமெனப்படும். எவைகளுக்குளொன் றிரண்டையும் சித்தமாகச்சார்ந்திருக்கின்றதோ அவவிரண்டும் அயுதசித்த சம்பந்தமுடையனவாகும்-எட்படியெனில அவயவா வயவிகளும் - குணகுணிகளும் - செய்கையும் செய்கையுளதும்- சாதிவியக்திகளும - விசேஷநித்தியதிருவியங்களுந்தானே.

அநாதியாயும் அந்தமுளதாயுமிருப்பது-பிராகபாவம். அஃது காரியம் பிறப்பதற்கு முன்னுளது.

ஆதியோடுகூடி அந்தமுருமலிருப்பது பிரத்துவம்சா பாவம். அஃது காரியப்பிறப்பிற்குப் பின்புளது.

அத்தியந்தா பாவமென்பது முக்காலத்தோடு கூடியிருக்கும் பொருளுககுப்பிரதி

யோகித் தன்மையுடையது. எப்படியெனில் பூமியிற்குடமில்லை - என்பதுபோல.

அதனது சம்பந்தத் தொடுகூடிய பிரதி யோகித்தன்மையுடையது அந்நியோந்நியா பாவம் - எப்படியெனில் - குடம்படமல்ல.



சகல பதார்த்தங்களும் சொல்லப்பட்ட வைகளில்அடங்கியமையால் பதார்த்தங்கள் ஏழே என்பதுசித்தம்.

தர்க்கசங்கிரகம்.

ஸம்பூர்ணம்.

இலக்கணம்.

சகலபதார்த்தங்களிற்கும் இலக்கணமுரை த்துப்பிரதிபாதித்தலே தர்க்கமெனப்படுவ தால்இலக்கணமித்தன்மையுடையதெனக்கூ றவேண்டியது அகத்தியமாகக் காணப்படுகி ன்றது.

இலக்கணத்திற் கிலக்கணமுரைப்பது நூ ன்முறைமை யல்லாவிடினும் அஃதையொ ருவாறுவிரங்கச் செய்யலாகின் றமையால் தீபிகையெனும் கிரந்தத்தின் சிலவாக்கியங்

கள்மொழிபெயர்க்கப்பட்டு இதனடியில் விவரிக்கப் படுகின்றன.

இலக்கணமென்பது மூன்று தூஷணங்களுமில்லாத தருமமாம்.

அவ்வியாப்த்தி - அதிவ்யாப்த்தி - அசம்பவம் என தூஷணங்கள் மூன்று.

எதைககுறித்து இலக்கணமுரைக்கப்படுகின்றதோ- அது இலக்கியம்.

இலக்கியப் பொருவி ஏகதேசத்திலின்மை - அவ்வியாப்த்தி-பசு விற்கு கருமையுடைமைபோல.

இலக்கியத்தன்மை யிலாப்பொருளிலுமிருப்பது அதிவியாப்த்தி - பசுவிற்குககோடுடைமை போல.

இலக்கிய முழுதிலு மில்லாமலிருப்பது அசம்பவம்-பசுவிற்கு ஒற்றைக்குளம்புடைமைபோல.

இம்மூன்று தூஷணங்களுமில்லாததருமம் இலக்கணமெனப்படும்-இதுவே- அசாதாரணதர்மமெனவுங்கூறப்படும் -பசுவிற்குஸாஸநாதி * யுடைமைபோல.

* ஸாஸநை-அலேதாடி.